# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2086 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24

*2086 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1756 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1757 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1760 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1761 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 1765 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**– இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 2018, ஓகத்து மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்
## பெறுகை அறிவித்தல்

கொழும்பு புகையிரத பொறித் தொகுதியிலுள்ள ஒதுக்கப்பட்ட வாகனங்களின் ( wagons) அகற்றல்

**பெறுகை இல. SRS/F. 7486**

1. கொழும்பு புகையிரத பொறித்தொகுதியிலுள்ள ஒதுக்கப்பட்ட வெகன்களின் (wagons) அகற்றலுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களம் பெறுகைக்குழு (உயர்மட்டத்திலானது) தலைவர் பொறுப்பேற்பார்.

2. விலைமனுக்கள் 2018.08.28 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. புகையிரத சேவைகள் பிரதான நிதியியல் அலுவலரின் அலுவலகத்திற்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான ரூபா 5,000 (ஐயாயிராம் ரூபா மாத்திரம்) செலுத்தப்பட்டு கொழும்பு 10, புகையரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலேயே 2018.08.27 ஆந் திகதியன்று பி.ப.3.00 மணி வரை விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் அவை உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரார்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுதிறப்பில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

5. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கீழேயுள்ள உத்தயோகத்தருக்கு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டத்திலானது),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்காக கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2438078, 2436818
தொலை நகல் இலக்கம் : 011- 2432044
குறியீட்டு எண்: SRS/ F. 7486

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

8- 898

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்
## பெறுகை அறிவித்தல்

Disposal of condemned Radiators, discarded Coil Springs Aluminium scrap and condemned Wheels & Axels at Railway Yard , Ratmalana.

**பெறுகை இல. SRS/F. 7580**

1. இரத்மலானை புகையிரத திறந்த வெளியிலுள்ள 30 M/T of condemned radiators 50 M/T of discarded Coil Springs 25 M/T of Aluminium Scrap and 500 M/T of Condemned Wheels and Axels ஆகியவற்றின் அகற்றலுக்காக கொழும்பு 10, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் ( உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார். விலைமனுக்கள் ஒன்றில் அனைத்து உருப்படிகளுக்கும் அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மாத்திரம் இருக்க வேண்டியதுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தங்கள் தனித்தனியாக வழங்கப்படும்.

2. 2018.09.04 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலை மனுக்கள் மூடப்படும்.

3. 2018.08.10 ஆந் திகதியிலிருந்து 2018.09.03 ஆந் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப.9.00 மணிக்கும் பி.ப.3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமான பத்தாயிரம் இலங்கை ரூபாவை (ரூபா 10,000) மாத்திரம் புகையிரத சேவைகளின் பிரதான நிதியிடல் அலுவலரின் அலுவலகத்தில் செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு 10, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே அவைகளை திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது அதே முகரியில் நேரடியாகவே ஒப்படைக்கலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டத்திலானது),
இலங்கை புகையிரத சேவைகள்,
இலங்கை புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம். மேலதிக விபரங்களுக்கு பின்வரும் வழிகளினூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2438078, 2436818
தொலை நகல் இலக்கம் : 011- 2432044.
மின்னஞ்சல்: srs.sir@ gmail.com
குறியீட்டு எண்: SRS/ F. 7580

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

8- 899

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்
## பெறுகை அறிவித்தல்

பாவனைக்கொவ்வாத 2000 மெ.தொ. உருக்கு/இரும்பு கழிவுத்துண்டுகளை இரத்மலானை தளத்திலிருந்து அகற்றல்

**பெறுகை இல. SRS/F. 73**

1. இரத்மலானை புகையிரத தளத்திலுள்ள அண்ணளவாக 2000 மெ.தொ.உருக்கு/இரும்பு கழிவுத் துண்டுகளை அகற்றுவதற்காக கொழும்பு 10, இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்), தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார்.

2. 2018.08.31 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலை மனுக்கள் மூடப்படும்.

3. பன்னிரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை (ரூபா 12,500) மாத்திரம் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக புகையிரத சேவைகள் பிரதான நிதியிடல் அலுவலரின் அலுவலகத்தில் செலுத்திய பின்னர் 2018.08.09 ஆந் திகதியில் இருந்து 2018.08.30 ஆந் திகதி வரை மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் இலங்கை,கொழும்பு -10, புகையிரத சேவைகள் களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் அவற்றை மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவே பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்/ஒப்படைக்கபடல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டத்திலானது),
இலங்கை புகையிரத சேவைகள்,
இலங்கை புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

6. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம். மேலதிக விபரங்களுக்கு , தயவு செய்து பின்வரும் வழிகள் வழியாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 011-2438078, 2436818
தொலை நகல் இலக்கம் : 011- 2432044.
மின்னஞ்சல்: srs.sir@ gmail.com
குறியீட்டு எண்: SRS/ F. 7573

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

8- 900

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - ஏறாவூர்

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், அரசுடமையாக்கப்பட்டதுமான பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2018.09.16 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு ஏறாவூர் சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சிட்டைப் பெற்றபின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனைத் தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

கே. ஜீவராணி,
நீதிவான்,
சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
ஏறாவூர்.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
ஏறாவூர்,
2018.07.31.

**ஏலவிற்பனைக்கான பொருட்களின் விபரம்**

| தொடர் இல. | வழக்கு இல. | வாகனப் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் |
|---|---|---|---|
| 1 | AR/ 536/12 | EP ME - 6887 | மோட்டார் சைக்கிள் |
| 2 | 7570/ E/13 | EP XP - 7936 | மோட்டார் சைக்கிள் |
| 3 | 8925/ E/13 | EP JV - 2233 | மோட்டார் சைக்கிள் |
| 4 | 12522/Misc/13 | EP VZ - 3953 | மோட்டார் சைக்கிள் |
| 5 | AR /910/16 | EP MA - 6469 | மோட்டார் சைக்கிள் |
| 6 | 24112/ Misc/ 17 | EP HD - 4000 | மோட்டார் சைக்கிள் |
| 7 | 10937/E/ 13 | பதிவு இல்லை | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 8 | 19410/ Misc/ 15 | பதிவு இல்லை | இழுவைப்பெட்டி (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 9 | 8806/F/ 13 | EP GG - 6892 | கையுழவு இயந்திரம் மற்றும் இழுவைப்பெட்டி (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |

8- 743

---

## சுற்றுலா நீதிவான் நீதிமன்றம் - களுவாஞ்சிக்குடி

பகிரங்க ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், அரசுடமையாக்கப்பட்டதுமான பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2018.09.15 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றபின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலவிற்பனைத் தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

கே. ஜீவராணி,
நீதிவான்,
சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி.

சுற்றுலா நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி,
2018.07.31.

**ஏலவிற்பனைக்கான பொருட்களின் விபரம்**

| தொடர் இல. | வழக்கு இல. | வாகனப் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் |
|---|---|---|---|
| 1 | 15011/MT/ 15 | EU-GU-8301 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 2 | 1129/ PC/11 | EP GR - 0047 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 3 | 19900/MT/17 | EP UC - 3593 | மோட்டார் சைக்கிள் |
| 4 | B/163/16 | EP MS-3659 | மோட்டார் சைக்கிள் |
| 5 | B/ 363/15 | EP BAQ-0932 | மோட்டார் சைக்கிள் |
| 6 | 15122/ E/ 15 | EP VU- 1099 | மோட்டார் சைக்கிள் |
| 7 | 14294/ MT/ 14 | WP HL-2630 | மோட்டார் சைக்கிள் |
| 8 | 1679/11 | EP JS- 0029 | மோட்டார் சைக்கிள் |
| 9 | AR/05/15 | EP GU- 3170 | மோட்டார் சைக்கிள் |
| 10 | AR/ 1110/ 14 | EP XV-7323 | மோட்டார் சைக்கிள் |
| 11 | 15625/ MT/ 15 | EP XU - 6667 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 12 | 18872/MT/15 | 157-4077 | மோட்டார் சைக்கிள் |
| 13 | 7757/E/13 | EP MG-1042 | மோட்டார் சைக்கிள் |
| 14 | 7872/E | EP US-1003 | மோட்டார் சைக்கிள் |
| 15 | B/794/12 | 36-2334 | உழவு இயந்திரம் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 16 | வழக்கு இல. அற்ற | BBB-3423 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 17 | 10751/PC/13 | பதிவு இல்லை | இழுவைப்பெட்டி (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 18 | B/ 760/12 | பதிவு இல்லை | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 19 | B/ 794/12 | பதிவு இல்லை | இழுவைப்பெட்டி (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 20 | 18874/MT/17 | பதிவு இல்லை | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 21 | AR/507/17 | EP MG - 5419 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |

8-744

# ஆய விற்பனையும் குத்தகையும்

## வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2019
## (2019, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2019, திசெம்பர் 31 ஆந் திகதி வரை)

*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "............................................. இலக்க ............................ கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2018.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதியன்று 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*5. 2018.09.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விற்பனை பெறத்தவறும் தவறணைகள் எதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2018.11.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.*

*7. இது பற்றிய மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*பீ. டீ.ரீ.சீ.ராஜிகா,*
*பிரதேச செயலாளர்,*
*வத்தளை.*

*பிரதேச செயலகம்,*
*வத்தளை.*
*2018, ஓகத்து 01.*

**அட்டவணை**

| இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்பு பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வத்தளை | திம்பிரிகஸ்யாய | 2018.09.19 - மு.ப. 10.30 | 7,260 |
| 2. | வத்தளை | உஸ்வெடகெய்யாவ | 2018.09.19 - மு.ப. 10.30 | 4,840 |
| 3. | வத்தளை | போபிட்டிய | 2018.09.19 - மு.ப. 10.30 | 7,260 |
| 4. | வத்தளை | மஹவத்த | 2018.09.19 - மு.ப. 10.30 | 6,050 |

*8-1195*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது:-

கம்பனியின் பெயர்: ஓராஸ் இன்டர்நெஷனல் புறொபர்டி டிவலொபர்ஸ் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீ வீ 98958

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2014.06.05

பதிவு முகவரி : இல. 10/2, போகஹவத்தை வீதி, அத்திடிய, தெஹிவளை

கம்பனிச் செயலாளர்.

8 - 578

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ்/ கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர்: பென்ஹம் ஃபுட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018 யூலை 26

கம்பனியின் இலக்கம்: பீவீ 00202462

பதிவு செய்யப்பட்ட முகவரி : 65 2/1A, காலி வீதி, தெஹிவளை வடக்கு

எக்கௌன்டிங் அன்ட் அலைட் சேர்விசஸ்( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்.

இல. 67, டேவிட்சன் வீதி,
கொழும்பு 04.

8- 702

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2018.07.11 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர்: வெஸ்ட் ஏசியா இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீவீ 00201873

பதிவு முகவரி: இல. 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 7

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்ட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8- 704

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2018.07.14 ஆந் திகதி முதல் கூட்டிணைக் கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது .-

கம்பனியின் பெயர்: சவுத் கோஸ்ட் லங்கா இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீவீ 00201992

பதிவு முகவரி: இல. 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 7

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்ட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8- 705

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி முறையாக கூட்டிணைக் கப்பட்டமைக்கான அறிவித்தல் .-

கம்பனியின் பெயர்: செஹன்சா மைக்ரோ கிரெடிட் (பிறைவேட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீவீ 00201513

பதிவு முகவரி : 135/ஏ, கட்டுவெல்லேகம, நீர்கொழும்பு

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018, யூலை 03

கம்பனிச் செயலாளர்கள்.

8- 725

---

## யுடெக் டெக்னொலொஜீஸ் ( பிறைவேட்) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

யுடெக் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி பீவீ 00201573 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்

பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் அன்ட் என் கட்டிடம்( 5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 00300இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

பிரணவன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
என்அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம்(5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

8-732

---

**கிறீன் ஹில்ஸ் ஃபார்ம் ( பிறைவேட்) லிமிட்டட்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

கிறீன் ஹில்ஸ் ஃபார்ம் (பிறைவேட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி பீவீ 00202143 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது எம் அன்ட் என் கட்டிடம்( 5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 00300இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகின்றோம்.

பிரணவன் நீலகண்டன்,
பணிப்பாளர்.
என்அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட்
செக்ரட்டறீஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம்(5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

8-733

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.-

கம்பனியின் பெயர்: சென்ட்டி மீட்டர் மோட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம்: பீவீ 00202384
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.24
பதிவு முகவரி: ஹால்பன்வில, மாரவில

கம்பனிச் செயலாளர்.

8-740

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர்: நொஜி ஜெப்பேன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00201560
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.07.04
பதிவு முகவரி : இல. 149, 11 ஆம் ஒழுங்கை, சாரபூமி, பட்டகெத்தர, மடபாத்த, பிலியந்தல

கம்பனிச் செயலாளர்.

(072-2852464)

8-793

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் 2016, திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி கீழ்க் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் பெயர்: பீ அவ ட்ரவலர் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 118609
பதிவு அலுவலகம் : 03 ஆம் மாடி, இல. 11, காசல் ஒழுங்கை, கொழும்பு 4

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3 ஆம் மாடி,
இல. 11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

8-858/1

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ்க் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

*கம்பனியின் பெயர்:* நிம்பஸ் க்லவுட் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 5365

*பதிவு அலுவலகம் :* இல.106, ரீட் ஒழுங்கை, கொழும்பு 4

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

3 ஆம் மாடி,
இல. 11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

8-858/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் 2017,செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதியின் கீழ் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

*கம்பனியின் பெயர்:* வெம் இன்ப்ராஸ்ட்ரக்ச்சர் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 125134

*பதிவு அலுவலகம் :* இல.11, குயின்ஸ் டெறஸ், கொழும்பு 3

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3 ஆம் மாடி,
இல. 11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

8-858/3

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் 2017, ஓகத்து மாதம் 15 ஆம் திகதியின் கீழ் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

*கம்பனியின் பெயர்:* செக்கியூர்மெட்டிக் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 124684

*பதிவு அலுவலகம் :* 07, முதலாம் ஒழுங்கை, இரத்மலானை

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3 ஆம் மாடி,
இல. 11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

8-858/4

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் 2017, ஒற்றோபர் மாதம் 12 ஆம் திகதியின் கீழ் குறிப்பிட்ட பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம்.-

*கம்பனியின் பெயர்:* எப்பிக் கிறீன் எக்கோசிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 126314

*பதிவு அலுவலகம் :* எப்பிக்டெக்னோ விலேஜ், 158/1A, கடுவெல வீதி, தலங்கம, பத்தரமுல்லை

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கரட்ரியல்
சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

3 ஆம் மாடி,
இல. 11, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

8-858/5

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ், இவ்வறிவித்தல் பிசுரிக்கப்படுகின்றது .-

*கம்பனியின் பெயர்:* ட்ரஸ்ஸமடிக் ஆர் அன்ட் டி (பிறைவேட்) லிமிட்டட்

*கம்பனியின் இலக்கம்:* பீவீ 00202664

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.08.02

*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 97/A, காலி வீதி, கொழும்பு3

பணிப்பாளர்.

8-883

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் .-

*கம்பனியின் பெயர்:* டொப் ரீச் லங்கா என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 00200494

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2018.05.25

*பதிவு முகவரி :* இல.337/4, உடுமுல்ல, முல்லேரியாவ, நிவ் டவுண்

*கம்பனியின் பெயர்:* க்ரூவி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்:* பீவீ 00200769

*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.06.03*
*பதிவு முகவரி :* இல.518/14/1, வாசனா மாவத்தை, பழைய வீதி,கொட்டாவ,பன்னிப்பிட்டிய

கம்பனிச் செயலாளர்கள்.

*8- 901*

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர்:* வீரதுங்க இலெக்ட்ரிக்கல்ஸ் (பிறைவேட் ) லிமிட்டட்.

*பதிவிலக்கம்: பீவீ 00201132*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.06.20*
*பதிவு முகவரி:* இல.510பி, தலங்கம வடக்கு, தலஹேன

*கம்பனியின் பெயர்:* அடேலியர் கன்செப்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

*பதிவிலக்கம்: பீவீ 00201034*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.06.17*
*பதிவு முகவரி :* இல.248/5A, பொல்ஹேன்கொட வீதி, கொழும்பு 5

பணிப்பாளர்.

*8- 902*

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இல. 53/23, ஹேவாஹெட்ட வீதி, தல்வத்த, கண்டி என்ற முகவரியில் வசிக்கும் நிர்மலா அபேதீர (தே.அ.அ.இல. 725281870V) ஆகிய நான், இல. 53/23, ஹேவாஹெட்ட வீதி, தல்வத்த கண்டி, இலங்கையில் வசிக்கும் நிரோஷ் லசந்த அபேதீர என்பவருக்கு வழங்கப்பட்டதும், கண்டி பிரசித்த நொத்தாரிசு திருமதி விஜேசிங்ஹ ஆரச்சிகே சுரங்கிகா ரணவீர என்பவரினால் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 880 ஆம் இலக்கமுடையதும் கண்டி பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தின் தினப்புத்தக இலக்கம் 4, பக்கம் 06 , பகுதி 100 இல் 2015.01.01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான அற்றோணித்தத்துவமானது இன்று முதல் செயல்வலுப்பெறும் வகையில் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் அவர் என்சார்பில் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பு தாரியில்லை எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

நிர்மலா அபேதீர.

*8- 701*

**அறிவித்தல்**

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இத்தாற் சகலருமறிக, 36, Northbrook Road, Lewisham, London. SE135QT ஐச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கைம்பெண் இராஜேஸ்வரி, சிதம்பரப்பிள்ளை ஞானகுமரன், சிதம்பரப்பிள்ளை உதயகுமரன், சிதம்பரப்பிள்ளை ரஜனி (தற்போது ரஜனி சக்திவேல்) ஆகிய நாங்கள் 1999ம் ஆண்டு வைகாசி மாதம் 20 ஆந் திகதி சொலிசிட்டர் K. ரட்ணபாலன் முகதாவில் (1999.07.06 ஆந் திகதி கொழும்பு பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் Book 200 Volume No. 28, Day Book No. 5291 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது) பழமுதிர்சோலை, அல்வாய் மேற்கு, அல்வாயைச் சேர்ந்த கந்தவனம் அருளானந்தம் மற்றும் தங்கேஸ்வரி அருளானந்தத்துக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தினை 2018.06.26 ஆந் திகதியான இன்றிலிருந்து அழித்தும் பலனற்றதாக்கியும் விடுகின்றோம் என அறியத்தருகின்றோம்.

மேலும் இன்றிலிருந்து எம் சார்பாக கந்தவனம் அருளானந்தம் மற்றும் தங்கேஸ்வரி அருளானந்தத்தினால் செய்யப்படும் எச் செயல்களுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கோ நாம் பொறுப்பாக மாட்டோம் என அறியத் தருகின்றோம்.

*8 - 723*

---

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக, சோசலிசக் குடியரசில், மொறட்டுவை, ராவதாவத்த, சார்ளஸ் பிளேஸ், இல. 11/1ஐச் சேர்ந்த அன்குரு கன்கானம்கே குமார சன்ட்ரா ஏக்கநாயக்க மற்றும் ஸ்டெப்னி சமரக்கூன் ஆகிய நாம, இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்துக் கொள்வதாவது, இல. 565, 2008.11.05 ஆந் திகதியிடப்பட்ட, மொறட்டுவை பிரசித்த நொத்தாரிஸ் அயோனி பிமல்கா பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, பாணந்துறை, ஹிரண, கலாயத்தன வீதி, 1ஆம் லேன், இல. 87ஐச் சேர்ந்த அஜித் சமரக்கூன் என்பவருக்கு எம்மால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டதாகவும், இது முதற்கொண்டு எமது அற்றோணித் தத்துவதாரராக, மேற்படி அஜித் சமரக்கூனினால் அவரின் கொள்ளளவில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயல் மற்றும் கருமங்களுக்கும் நாம் பொறுப்பாக இருக்கப் போவதில்லை என்பதாகும்.

அன்குரு கன்னானம்கே குமார சன்ட்ரா ஏக்கநாயக்க
மற்றும் ஸ்டெப்னி சமரக்கூன்

*2018, ஓகத்து 06.*

*8 - 726*

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கை சனநாயக, சோஷலிசக் குடியரசின் ஹொரண, பொகுணுவிட்ட, மீமண. பிரேமதிலக மாவத்தை என்ற முகவரியில் வசிக்கும் தற்பொழுது New Zealand, Epsom Auckland, 5/2,

Corbett Scott Avenue என்ற முகவரியில் வசிக்கும் பிரேமசான்த அளுத்கே ஆகிய நான், ஹொரண, பொகுணுவிட்ட, மீனண, பிரேமதிலக மாவத்தை என்ற முகவரியில் வசிக்கும் அளுத்கே தொன் ரஞ்ஜன விபுலசான்த என்பவருக்கு வழங்கப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ.டீ.எல்.பி. வைத்தியசேகர என்பவரினால் 2012.01.21 ஆந் திகதியன்று அத்தாட்சிப் படுத்தப்பட்ட 492 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்யப்படுகின்றதென இலங்கைக் குடியரசிற்கும் இலங்கை வாழ் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பிரேமசான்த அளுத்கே.

8 - 730

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

களுத்துறை மாவட்டம், பாணந்துறை, கொரக்கபொள, குணசேன மாவத்தை, இல. 31/5 இல் வசிக்கும் குருகே ரொஷானி தில்ஹார பெர்ணாண்டு ஆகிய நான், பாணந்துறை மற்றும் களுத்துறை மேல் நீதிமன்ற நியாயாதிக்க வலய பிரசித்த நொத்தாரிசு, திருமதி ஜயசிங்ஹ ஆரச்சிகே உதேசிகா பிரியதர்ஷனி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், பாணந்துறை, கொரகபொள, குணசேன மாவத்தை, இலக்கம் 31/5 இல் வசித்தவரும் தற்பொழுது இலக்கம் 64, VIA MARCO AURELIO (20127), MILANAO, ITALY இல் வசிப்பவருமான குருகே சுமுது கயான் பெர்ணாண்டு என்பவருக்கு வழங்கப்பட்டதுமான விசேட அற்றோணித் தத்துவமானது, இத்தால் இரத்துச் செய்து இல்லா தொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் இவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகள் மற்றும் கொடுக்கல் வாங்ககல்களிற்கும் நான் பொறுப்புதாரியில்லை எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

குருகே ரொஷானி தில்ஹார பெர்ணாண்டு

8- 928

---

## ஏல விற்பனைகள்

### பிரதேச அபிவிருத்தி வங்கி

*2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் 40 ஆம் பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான பெறுமதி மிக்க சொத்து விற்பனை*

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வன்னி ஹத்பத்து, கந்திகே கோரளே, மாகோ பிரதேச சபை எல்லைகள் மற்றும் அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட, 191 ஆம் இலக்க யுதகனாவ கிராம அலுவலர் பிரிவில், கிவுலேகம கிராமத்தில் அமைந்துள்ள, குருநாகல் நில அளவையாளர் அதிகாரி அவாகளால் வரையப்பட்ட, 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட F.V.P. 3178 இன் துண்டு 02 எனவும், F.V.P. 3178 இன் துண்டு 105 எனவும் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்கக் காணியான பூச்சியம் தசம் இரண்டு ஹெக்டயர் (ஹெக்டயர் 0.20000) மற்றும் பூச்சியம் தசம் ஒன்று (ஹெக்டயர் 0.1000) அளவையாளர் ஹெக்டயர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும். வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

**பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.**

**தீர்மான அறிவித்தலுக்கு.**-தயவு செய்து 2018, பெப்புருவரி 09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2018, ஏப்பிறல் 12 ஆந் திகதிய தினமின, டெயிலி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஆதனத்தைச் சென்றடைதல்.**-அம்பன்பொல பஸ் நிலையத் திலிருந்து குருநாகல் வீதியில் சுமார் 500 மீற்றர் தூரம் வரை சென்றதும் குறித்த சொத்து வீதியின் இடது பக்கத்தில் அம்பன்பொல மத்திய மகா வித்தியாலயத்திற்கு எதிராக அமைந்து காணப்படுகிறது.

**கொடுப்பனவு செய்யும் முறை**: ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 25% (இருபத்தைந்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்);
(3) ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அதற்குப் பொருத்தமான சகல வரிகளும்;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500 ;
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, அம்பன்பொல கிளை, அநுராதபுரம் வீதி, அம்பன்பொல என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இலக்கம் : 037 2 253 535

மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
126 வருடகால மகோன்னத சேவை.

தலைமை அலுவலகமும் காட்சியறையும் :
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி: 081-2227593
தொலை/பக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு 8
தொலைபேசி: 011-2671467
தொலை/பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@sameera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

8 - 710

---

## பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து வேறாக்கப்பட்ட காணித்துண்டு( மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, பள்ளே பற்று, கடுவளை மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு, ஹோகந்தரை வடக்கு கிராம அலுவலர் பிரிவு, ஹோகந்தர வடக்கில் அமைந்துள்ளதும் கஹன்தோட்டை வீதி, வரிமதிப்பு இல. 39 ஐக் கொண்டதும் ''கலபொடவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அனில் நவகமுவ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2012, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 5080 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ 1சீ உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. எஸ். எஸ். குருப்பு அவர்களால் தயாரிக்கப்பட்டு 1983, மே 27 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1003 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 இன் எஞ்சிய பாகத்தின் மீண்டும் நிலஅளவையாகவும் இருக்கின்ற மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் அனில் நவகமுவ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010, மாச்சு 05 ஆந்திகதியிடப்பட்ட வரைட இல. 4001 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ இன் ஒரு உப பிரிவாகவும் மீண்டும் மீள் நிலஅளவையாகவும் இருக்கின்ற மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ அவர்களால் தயாரிக்கப் பட்டு 2010, ஒகத்து 03 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 4090 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ 1 இன் ஒரு உப பிரிவாகவும் மீண்டும் மீள் நிலஅளவையாகவும் இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள் பயர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை.**

**( காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ. 19.40பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- மாலபேயிலிருந்து அத்துகிரிய வீதி வழியே அரங்கலை சந்திவரை ஏறக்குறைய 2.1 கிலோமறீற்றர் சென்று கஹன்தோட்டை வீதிக்கு இடப்பக்கம் திருமபி, ஏறக்குறைய 100 மீற்றர் சென்றதும் விற்பனைக்குரிய ஆதனம் இடப்பக்கத்தில் இருக்கின்றது.

(கடப்பாடுடையவரான ஷந்தன கெலும் டயஸ் அபேகுணவர்தன,கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. டி. ஜே. எஸ். மாயாதுன்னே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016.11.07 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1208 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளார்கள்)

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2018, செத்தெம்பர் 12 ஆந் திகதி மு.ப.9.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2018.08.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.07.20 ஆந் திகதிய ''த ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபைக் கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் ஏனைய கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் 3,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% ( தொண்ணூறு வீதம்) ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் , ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் (பத்து வீதம்)10% ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 4667218.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 182/3 (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. : 011-3068185
செல்லிட தொலைபேசி இல. : 071- 4177199.

8- 832

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – இரத்மலானை கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஆதனம் பகிரங்க ஏல விற்பனை

கடன் எடுத்த வீரசிங்க கெதர சுரேஷ் கிரிஷாந்த வீரசிங்க மற்றும் மனுவெல் பீரிஸ்லாகே ஜெனிட்டா காஞ்சனா குமாரி பீரிஸ் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எல்.ஆர்.விதாரன 2015.08.21 ஆந் திகதியுடைய முறி இல. 1391 இன் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மிகுதி முற்பணமும் வட்டியும் ஏலதாரரின் கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம் 2018, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் அதே இடத்தில் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன தல்பிட்டி தெபத்த பண்டாரகம பிரதேச சபை மற்றும் மாவட்ட செயலாளர் தொகுதியில் இலக்கம் 691B பட்டதொம்பதுவ கிராம அலுவலர் எல்லையில் அலுபோமுல்ல கிராமத்தில் உள்ள தெல்காவத்த காணிக்கு நிலஅளவையாளர் எம். டி. என். பர்னாந்துவின் 2008.05.24 ஆந் திகதியுடைய வரைபட இல. 6181 இல் காண்பிக்கப்பட்ட லொட் A.

இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.11.48பே. இக்காணியில் உள்ள கட்டிடம் எல்லாம் சேர்த்து.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2017.07.07 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2017.07.10 ஆந் திகதியுடைய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்**. பாணந்துறை நகரத்தில் இருந்து ஹொரணை ரோட்டில் 5.5 மீற்றர் சென்று கல்வெட் 6/1 தாண்டி இடதுபக்கம் உள்ள பட்டதொம்பதுடுவ ரோட்டில் 600 மீற்றர் சென்று இடதுபக்கம் திரும்பி வாகனங்கள் செல்லும் பிரத்தியேக ரோட்டில் 400 மீற்றர் சென்று முதலாவது திருப்பம் வலதுபக்கமுள்ள 15 அடி அகல ரோட்டில் சம்பந்தப்பட்ட சொத்து இடப் பக்கமாக உள்ள இரண்டாவது காணிக்கு நுழைய முடியும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலதாரரின் தரகு பணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);

(4) விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;

(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா;

(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் 10% முற்பணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice @ sltnet.lk

8- 835

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — பொலன்னறுவைக் கிளை

(முன்பு ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பெறுமதி மிக்க ஆதனம் பகிரங்க ஏல விற்பனை*

**கடன் எடுத்த ஏவா மாத்தரகே உபாலி சரத் சந்திர மற்றும் கஸ்பெரலாலகே அலிஸ் நோனா அல்லது திசாநாயக்க ஜயவீர கஸ்பரலாலகே அலிஸ் நோனா ஹற்றன் நஷனல் வங்கி சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ்.எஸ். ஏவா பதிரனவின் 2014.11.04 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 3878 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மிகுதி கொடுப்பனவுத் தொகைகளையும் வட்டியும் ஏலதாரரினால் சொல்லப்பட்ட பணத்தொகைகளையும் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,**

கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2018, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் அதே இடத்தில் விற்பனை செய்யப்படும்.

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், தும்மன்கடுவ மாவட்ட செயலாளர் எல்லையில் மெதபத்துவ பொலன்னறுவை நகர இலக்கம் 172 கிராம அலுவலர் எல்லையில் பொலன்னறுவை நகரம், நிசங்கமால மாவத்தையில் அமைந்துள்ள நிலஅளவையாளர் வசம் உள்ள வரைபட இலக்கம் FSP 3950 இல் காண்பிக்கப்பட்ட அரசாங்க காணியான லொட் 130

இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ.1றூ.34பே.) இக்காணியில் உள்ள கட்டிடம் எல்லாம் சேர்த்து .

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக**.- 2018.06.14 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.06.18 ஆந் திகதியுடைய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்**. ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்து தம்பல ரோட்டில் 100 மீற்றர் சென்று இடதுபக்கம் உள்ள கொங்கிறீட் போட்ட நிசங்கமல்ல மாவத்தை ஊடாக 150 மீற்றர் செல்லும் போது D1 சனல் சந்திக்கும் இடத்தின் அருகில் சம்பந்தப்பட்ட காணியை காண முடியும். இக்காணி ரோட்டில் இடது பக்கம் அமைந்துள்ளதுடன் நிலஅளவையாளர் நாயகத்தினால் வரைபடத்தில் இல. எப். எஸ். பி. 3950 இல் துண்டு இல. 130 ஆக சம்பந்தப்பட்ட காணி காட்டப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை ஏலதாரருக்கு பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;

(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;

(3) ஏலதாரரின் தரகு பணம் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);

(4) விற்பனைச் சான்றிதழுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2000 ரூபா ;

(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா;

(6) ஏலத்திற்கு செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் 10% முற்பணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடப்படும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- "சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2664664.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. :011- 2445393, 011-2396520.
தொலைநகல் இல. : 011-2445393.
மின்னஞ்சல்: senaservice84 @ gmail.com

8- 836

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ - மத்துகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் விற்பனை.*

### 1ஆவது அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், இந்தகொட பத்து பந்துண் கோரள மேற்கு மத்துகம பிரதேச சபை எல்லையில் மத்துகம மாவட்ட செயலாளர் எல்லையில் இலக்கம் 805D வெட்டவ கிராம அலுவலர் தொகுதியில் வெட்டவெ கிராமத்தில் உள்ள வலுகீண்ணத்த அல்லது மொணரஎந்துகவத்த காணிக்கு நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ.வி.கே. பிரியரத்னவின் 2007.06.19 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 16/2007 இல் காண்பிக்கப்பட்ட லொட் 04.

இக்காணியின் விஸ்தீரணம்: (0ஏ. 2றூ. 6.79 பேர்.)

இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், எல்லாம் சேர்த்து.

கடன் எடுத்த இந்தகொட ஏவகே பியால் ரங்கண்ண மற்றும் வெலிதரகே தில்சிக்கா செவ்வனந்தி அல்லது வெலிதரகே தில்சிக்கா செவ்வனந்தி அல்லது வெலிதரகே தில்சிக்கா செவ்வனந்தி மற்றும் காணியை ஈடு வைத்த வெலிதரகே தில்சிக்கா செவ்வனந்தி அல்லது வெலிதரகே தில்சிக்கா செவ்வனந்தி மேற்படி 1 ஆவது அட்டவணையில் உள்ள காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்.

முதலாவது அட்டவணை லொட் 4 இல் (0ஏ. 2றூ. 6.79 பேர்.) மேற்குறிப்பிடப்பட்டுள்ள காணியை 2018, செத்தெம்பர் மாதம 21 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2016.06.27ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளையும், ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2018.08.24ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 2018.08.27ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''த அயிலன்ட்'' மற்றும் ''தினக்குரல்''ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.- (1 ஆவது அட்டவணை லொட்4)** : வடக்கு கிழக்கு பக்கம் இருந்து களுத்துறை மத்துகம ரோட்டில் மத்துகம சுற்று வட்டத்தில் இருந்து 2 ஆவது வெளியேறும் பகுதியில் மத்துகம அகலவத்த ரோட்டில் 1.5 கி.மீ.-2 கி.மீ மத்துகம - அகலவத்த ரோட் பக்கம் வலது பக்கம் மொனரந்துவில்ல ரோட்டில் கீரீன் எமிசன் டெஸ்ட் சென்டர் தாண்டி இடது பக்கம் வத்தேவ, இங்கு இருந்து நேராக மொனரன்துவில ரோட் 500-600 மீற்றர் இடதுபக்கம் காணி உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏல விற்பனைக்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி;
கொள்வனவு விலையின் மிகுதி 90% கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது மத்துகம கிளையில் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

***வேறு விபரங்களுக்காக.-***

முகாமையாளர்,
கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ,
இல.99, களுத்துறை வீதி, மத்துகம.
தொலைபேசி இல. 034- 2249470-2
தொலைநகல் இல. 034- 2249473.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
உத்தரவுபெற்ற சிரேஷ்ட ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393
ஈ- மெயில்: senaservice 84@ gmail.com

8-837

---

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ - நாத்தாண்டிய கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் விற்பனை.

### 1ஆவது அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், யாகம்பத்து பிட்டிகல் கோரள வடக்கு நாத்தாண்டிய பிரதேச சபை எல்லையில் மாதம்பே மாவட்ட செயலாளர் எல்லையில் இலக்கம் 547 A மாகம்ம வடக்கு கிராம அலுவலர் எல்லையில் புளியன்கர கிராமத்தில் அமைந்துள்ள கருண்குலிய எஸ்டேட் குரப் காணிக்கு நிலஅளவையாளர் ஆர். என். கருணாதிலகவின் 2005.05.03 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1425B இல் காண்பிக்கப்பட்ட லொட்1.

இக்காணியின் விஸ்தீரணம்: 3 ஏக்கர் (3ஏ. 0றூ. 0 பேர்.)
இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.

### 2 வது அட்டவணை

Two Numbers of doubled moulded semi automatic grow bag making machines installed on a firm concrete foundations at Brown Coir Export (Pvt) Ltd., situated at Sri Sumangala Road, Mugunuwatawana, North Mahagama, Chilaw.

Machine Name - Grow Bag Making Machine

Make - Made by local company by using imported component such as Hydraulic Pump, Control Valves, Valve Solenoids Hydraulic Cylinders and Electric Motors

Motor - 30Hp, 50Hz, 1500rpm, 420V 3 Phase Motor, Chinese Make

Hydraulic Tank

Capacity - 315 Lits

Year of Manufacture - 2013

கடன் எடுத்த நாத்தாண்டிய தப்போவ ராஜபக்ச எஸ்டேட் இலக்கம் 67A என்ற பதிவு முகவரியில் உள்ள இலங்கை கம்பனி சட்டப்படி அமைந்துள்ள பிரவுண் கொயர் எக்ஸ்போட் (பிறைவேட்) லிமிட்டட் (முன்பு கிலன் லொஜிஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் என்று சொல்லப்பட்டது . மேற்படி 1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடு வைத்துள்ளார்.

இரண்டாவது அட்டவணை - Grow Bag Making Machine 2018, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

முதலாவது அட்டவணை லொட் 1( 3ஏ.0றூ.0பே.) - 2018, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2018.08.03ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.08.06 ஆந் திகதியுடைய ''லக்பிம'', "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும், ஏல விற்பனை விளம்பரத்துக்காக 2018.08.24ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் "லக்பிம", "த அயிலன்ட்" மற்றும் "தினக்குரல்"ஆகிய பத்திரிகை களையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.- ( 1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணை) :** இக்காணியை அடைய கொழும்பில் இருந்து புத்தளம் ரோட் (A3) 63 கிலோ மீற்றர் மாதம்பே சந்தி வரை வலது பக்கம் திரும்பி குளியாப்பிட்டிய ரோட்டில் 2.5 கி.மீற்றர் மாதம்பே புதிய நகரம் வரை சென்று வலது பக்கம் திரும்பி ரயில்வே கடவை தாண்டி இடது பக்கம் உள்ள மெதகம ரோட்டில் 11 கிலோ மீற்றர் சென்று இடது பக்கம் திரும்பி பிரதேச சபை பாதையில் சும்மன்கல ரோட்டில் 200 மீற்றர் செல்ல இக் காணியை அடைய முடியும். வலது பக்கம் உள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.-** உத்தேசக் கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏல விற்பனைக்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி;

கொள்வனவு விலையின் மிகுதி 90% கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது நாத்தாண்டிய கிளையில் விற்பனை நாளிலிருந்து 30 நாட் களுக்குள் செலுத்த வேண்டும்.

**வேறு விபரங்களுக்காக.-**

முகாமையாளர்,
கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ,
இல. 32/B, மாரவில ரோட், நாத்தாண்டிய,
தொலைபேசி இல. 032- 2255850, 032-2255171
தொலைநகல் இல. 032- 2255172.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
